# ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல்

**முனைவர் ந.உமா**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**

**பூம்புகார்க் கல்லூரி(தன்னாட்சி), மேலையூர்-609107.**

**மயிலாடுதுறை.umamanimyd@gmail.com**

**33**

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழர்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கினார்கள். விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உணவு முதலியவைகளை அளித்து மிக்க அன்போடும் ஆர்வத்தோடும் அவர்களை உபசரிப்பது வாழ்க்கையில் தலைச்சிறந்த பண்பாகக் கருதப்படுகிறது.விருந்தோம்புகிற பண்பு நிலவும் சமூகத்தில் பசியும் பட்டினியும் இருக்காது என்றும் அந்தச் சமூகத்தில் மனிதர்கள் பாதுகாப்புடன் இருப்பார்கள் என்றும் இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது.

**திறவுச்சொற்கள்:**

வேளாண் வாயில்(பொருநராற்றுப்படை)

விரகு(பொ.ஆ)

அறுவை (சிறுபாணாற்றுப்படை)

இன்புளி வெஞ்சோறு(சி.ஆ)

சிதர்வை(பெரும்பாணாற்றுப்படை)

கிழவிர் (கூத்தராற்றுப்படை)

நுழைநூற் கலிங்கம் (கூ.ஆ)

**முன்னுரை:**

தமிழரின் மரபையும் தொன்மையையும் அறிவதற்கான வரலாற்றுச் சான்றாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன.பகிர்ந்து உண்டு பல்லுயிர் ஓம்புவோம் என்ற கோட்பாட்டைத் தமிழன் பேச்சளவில் அன்றி வாழ்க்கையில் பின்பற்றி செயல்படுத்தியவன் ஆவான். பொருளின்றி வாடும் வறுமை நிலையிலும் பொருளின்றி வறுமையில் வாடுபவனிடம் பரிவோடு பேசி, தக்க வள்ளலையும் மன்னனையும் குறிப்பிட்டு அவரிடம் சென்றால் உனது வறுமை தீரும் என்ற நம்பிக்கை ஊட்டுகின்றவனாகப் பரிசு பெற்றவன் இருந்திருக்கிறான் என்பதை ஆற்றுப்படை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

தான் பெற்ற செல்வத்தைப் பிறரது பசியைத் தீர்க்கக் கொடுத்து உதவும் ஈகையையும் காண்கையில் இவர்கள் வள்ளல்களை விட ஒரு வகையில் மேலும் உயர்ந்தவர்கள். மேன்மைமிக்கவர்கள் என்ற எண்ணத்தை எழச்செய்கிறது. அந்தவகையில் ஆற்றுப்படை வலியுறுத்தும் விருந்தோம்பல் சிந்தனைகளை விளக்க முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**உயிரினும் மேலான பண்பு:**

மக்கள் உயிர்வாழ உணவு இன்றியமையாதது. உணவின் அடிப்படைத் தேவையை நன்கு உணர்ந்த நம் முன்னோர்கள் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ற உயிர்ச்சத்துகள் நிறைந்த உணவுப் பொருள்களை உண்டு வந்தனர். மேலும் தாம் உண்பதோடு மட்டுமல்லாமல் உணவில்லாமல் வறுமையில் வாடிய ஏழை எளியவர்களுக்கும் வீட்டிற்கு வரும் புதியவர்களுக்கும் உணவினை வழங்கி அவர்கள் உண்பதைக் கண்டு மகிழ்ந்தனர். உணவளிக்கும் உயரிய மாண்பு தமிழர் வரலாற்றில் இலக்கியங்களில் பெரிதும் பேசப்படுகிறது.

'ஆற்றுப்படை பாடல்கள் தமிழரின் பண்பாட்டையும் பழக்கங்களையும் சித்தரிக்கின்றன. தம் வீட்டிற்கு விருந்தினராக வந்தவர்க்கு அவர் மனம் மகிழும் வண்ணம் அமுது படைத்துத் தம் பெருமையை நிலைநாட்டுவது தமிழர் பண்பாகும்.' (பழந்தமிழரின் பழக்கவழக்கங்கள், ப – 24)

**பொருநராற்றுப்படையில் விருந்தோம்பல்:**

கரிகால் பெருவளத்தான் எளியவரையும் நட்புடன் விரும்பி விருந்தோம்பும் பண்பாளன்.

ஒருவருக்கு சிலவற்றை கொடுப்பதைக் காட்டிலும் அணுகும் முறையும் , நடந்து கொள்ளும் விதமும் அவர்களைப் பற்றிய எண்ணத்தை மனதில் உயர்ந்த இடத்தில் கொண்டு செல்லும். அவ்வகையில் கரிகால் பெருவளத்தானின் செயல்பாடு அவனைப் பற்றிய நன்மதிப்பை மனதில் எழச்செய்கிறது.

"கேளிர் போலக் கேள் கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறி
கண்ணில் காண நண்ணு வழி இரீஇப்
பருகு அன்ன அருகா நோக்கமொடு
உருகுபவை போல் என்பு குளிர் கொளீஇ" (பொருநராற்றுப்படை- 74-78)என்ற அடிகளின் வழி கரிகாலன் பொருநனை அணுகிய விதத்தை அறியலாகிறது. அருகில் அமர செய்து அன்புடன் பார்த்த முறையை உணரமுடிகிறது. பொருநன் தனக்குக் கிடைத்த மரியாதையை மகிழ்ச்சியுடன் கூறுகிறான். கரிகால் பெருவளத்தானின் பெருஞ்சிறப்பும் உயர்ந்த பண்பும் இதன் வழி அறியலாகிறது.

கரிகாலன் உணவு முதலியவை தந்து பேணிய முறையைப் பொருநன் எடுத்துரைகின்றான்.தக்க காலத்தை உணர்ந்து எம்மை அழைத்து சூடாக செய்த இறைச்சியாகிய பெருந்தசைத் துண்டங்களைப் பலமுறை உண்ணுங்கள் என்று எம்மை வற்புறுத்தித் தந்தனன். அவற்றின் வெப்பத்தை ஆற்றுதற் பொருட்டு வாயின் இடப்பக்கத்தும் வலப்பக்கத்தும் மாற்றி மாற்றிச் சேர்த்துத் தின்று இனி இவை எமக்கு வேண்டாம் என்று கூறுகையில் இனிய சுவையை உடைய பண்ணியாரங்களைக் கொணர்ந்து தந்து அவற்றை உண்ணச் செய்தனர் என்பதை,

" .........பதன் அறிந்து
துராஅய் துற்றிய துருவை அம் புழுக்கின்
பராஅரை வேவை பருகு எனத் தண்டிக்
காழின் கட்ட கோழ் ஊன் கொழுங் குறை

ஊழின் ஊழின் வாய் வெய்து ஒற்றி

அவை அவை முனிவகும்எனினே சுவைய

வேறு பல் உருவின் விரகு தந்து இரீஇ

(பொருநராற்றுப்படை-102-108)என பொருநன் கரிகாலனின் சிறப்பைக் கூறுகிறான்.

புதிதாக ஈன்ற பசு தன் கன்றினைக் கனிவுடன் நோக்குதல் போல விருந்தினரை நோக்கி விருப்புடன் வரவேற்க வேண்டும். இதனை,

"ஈற்ற ஆ விருப்பின் போற்றுபு நோக்கி" (பொருநராற்றுப்படை – 151)

என்று பொருநராற்றுப்படை கூறும். தமிழரின் பாரம்பரியப் பண்புகளுள் ஒன்றாகத் திகழக்கூடிய விருந்தோம்பலில் செய்யக்கூடிய முறைகளை மிகச்சரியாக செய்தவன் கரிகாலன். விருந்தினர்கள் விடைப்பெற்றுச் செல்லும்போது அவர்கள் பின்னே ஏழடி நடந்து சென்று வழியனுப்பி வைப்பார்கள். கரிகாலன் தன்னை நாடி வந்த பொருநர்களை வரவேற்று உபசரித்து அவர்கள் விடைபெறும் பொது ஏழடி தூரம் நடந்துச் சென்று வழியனுப்பியதை

"காலின் ஏழ் அடிப் பின் சென்று கோல் இன்" (பொருநராற்றுப்படை-166)

என்ற அடியின் மூலம் அறியலாம்.

**சிறுபாணாற்றுப்படையில் விருந்தோம்பலின் சிறப்பு:**

மன்னன் நல்லியக்கோடனின் தலைச்சிறந்த பண்புகளையும் வீரத்தையும் வள்ளல் தன்மையும் விருந்தோம்பும் முறைமையும் இந்நூலில் காணமுடிகிறது.

நல்லியக்கோடனை யார் காணச் சென்றாலும் அவர்கள் மூங்கில் உட்பட்டையை உரித்தாற் போன்ற ஆடையை உடுத்துவதற்குத் தருவான். சமையல் கலையில் சிறந்த வீமன் எழுதிய சமையல் நூலினைக் கொண்டு சமைக்கப் பெற்ற அரிய வகை உணவுகளை வழங்குவான். சூரியனைப் போன்ற பொற்கிண்ணத்தில் உணவை வைத்துப் பரிமாறி தானே அருகில் இருந்து உண்ணச் செய்வதை,

"காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇப்

பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கிக்

கா எரியூட்டிய கவர் கணைத் தூணிப்

பூ விரி கச்சைப் புகழோன் தன்முன்

பனிவரை மார்பன் பயந்த நுண் பொருட்

பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்(சிறுபாணாற்றுப்படை-236-241)

என்ற அடிகளின் வழி அறியமுடிகின்றது.

நல்லியக்கோடனின் அரண்மனை வாயில் என்றும் அடையா வாயில் என்பதை,

"பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு ஆயினும்

அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்

கடவுள் மால் வரை கண் விடுத்தன்ன

அடையா வாயில் அவன் அருங் கடை குறுகி" (சிறுபாணாற்றுப்படை-203-206)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

வள்ளலை நாடி வழிநடந்து வரும் வழியில் சிற்றூர்களில் வாழும் எளிய மக்கள் தங்கள் நிலத்திற்குக் கிடைக்கும் உணவு வகைகளில் மேன்மையானவற்றை இரவலர்க்கு அளித்து விருந்தோம்பியதை,

"எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில் வளை ஆயமொடு
ஆமான் சூட்டின அமைவரப் பெறுகுவிர்" (சிறுபாணாற்றுப்படை-175-177)

என்கிறது.நல்லியகோடனின் நாட்டினுள் அடி எடுத்து வைத்தாலே போதும் நம் வறுமை நீங்கிவிடும் . அவனது குடிமக்களும் விருந்தோம்பும் பண்பு மிக்க வள்ளல்களாக உள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

**பெரும்பாணாற்றுப்படையில் விருந்தோம்பல்:**

தொண்டைமான் இளந்திரையன் தன்னை நாடி வருபவர்களுக்கு ஆடை வழங்கினான். ஆள் பாதி ஆடை பாதி என்பது பழமொழி . அவர்கள் மேல் அவர்களுக்கே ஒரு தன்னம்பிக்கை ஏற்படும் வண்ணம் அவர்கள் அணிந்திருந்த பழைய ஆடைகளை களையச் செய்து புத்தாடைகள் வழங்கியதை,

"பாசி அன்ன சிதர்வை நீக்கி
ஆவி அன்ன அவிர் நூற் கலிங்கம்
இரும் பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் உடீஇ" (பெரும்பாணாற்றுப்படை -468-470)

அதன் பிறகு தானே அருகில் இருந்து உபசரித்தான் . விருந்து அளிக்கும் சிறப்பை விட அவர்களை அருகில் இருந்து தானே உண்ணச் செய்யும் பண்புப் போற்றுதலுக்குரியது. தன் பிள்ளைகளின் முகம் பார்த்து ஊட்டும் ஒரு தாயைப் போல தொண்டைமான் இளந்திரையன் பாணர்களுக்கு

மரபு பிறழாது, பொன்கலத்தில் விண்மீன்களைக் கொட்டியது போல வெண்சோறிட்டுப் பெரிய விருப்பத்துடன் தானே முன்னின்று உடனிருந்து உணவுக் கொடுத்து மகிழ்ந்ததை,

"விருப்புடை மரபின் கரப்புடை அடிசில்
மீன் பூத்தன்ன வான் கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகன் அமர்ந்து
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி" (பெரும்பாணாற்றுப்படை -476-479)

என்ற அடிகளால் அறியலாம்.

உடுத்தும் உண்ணச் செய்தும் பரிசுகளையும் தந்தான். விருந்தினர்கள் விடை பெறும் முன் அவர்களுக்கு நினைவாக பொருட்கள் தந்து அனுப்பும் முறை இன்றைக்கும் சில வீடுகளில் உள்ளது. தொண்டைமான் இளந்திரையன் பொற்றாமரை, பொன்னாலான மாலை, பல புரவிகள் பூட்டிய தேர் முதலியவற்றைக் கொடுத்ததை,

"ஆடு வண்டு இமிரா அழல் தவிர் தாமரை
நீடு இரும் பித்தை பொலியச் சூட்டி
தொடை அமை மாலை விறலியர் மலைய
வளை கண்டன்ன வால் உளைப் புரவி

துணை புணர் தொழில் நால்கு உடன் புரவி

அரித் தேர் நல்கியும் அமையான் செருத் தொலைத்து” (பெரும்பாணாற்றுப்படை 481-490)

என வரும் அடிகள் சான்றாகும். தொண்டைமான் இளந்திரையன் பாணர்களைப் போற்றும் முறைமையை பெரும்பாணாற்றுப்படை தெள்ளிதின் எடுத்துரைக்கின்றது.

**கூத்தராற்றுப்படையில் விருந்தோம்பல்:**

நன்னெறியில் ஒழுகக்கூடிய நன்னன் சிறந்தவன் அவனது குடிகளும் அவனைப் போன்று நற்பண்பு உடையவர்கள். புதியவராக இருந்தாலும் நட்பு கொண்டு இன்மொழிக் கூறி உபசரிப்பார்கள் என்பதை,

“மான விறல் வேள் வயிரியம் எனினே

நும் இல் போல நில்லாது புக்கு

கிழவிர் போலக் கேளாது கெழீஇ

சேட் புலம்பு அகல இனிய கூறி

பரூஉக் குறை பொழிந்த நெய்க்கண் வேவையோடு

குரூஉக் கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்” (சிறுபாணாற்றுப்படை – 164-169)

என்ற அடிகள் வழி அறியலாம்.மேலும்,

“மக முறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்” (சிறு. -185)

என்ற அடியின் மூலம் பிள்ளைகளை விட்டு முறைச் சொல்லி அழைக்கக் செய்து தடுத்து நிறுத்தி இன்னும் சில நாட்கள் தங்கியிருக்க செய்வர்.

இரவலர் கொடை வள்ளல் ஒருவரைக் காணும்போதும் உண்டாகும் இன்பத்தைவிட இரவலரைக் கண்டபோது கொடைவள்ளலுக்கு

உண்டாகும் இன்பம் பெரிது. இத்தகைய உள்ளப் பண்பு நன்னனுக்கு இருந்தது.தன்னை நோக்கி வருபவர்களுக்கு ஆடைகளை தந்து, பல நாட்கள் தங்கியிருக்கச் செய்து நாள் தோறும் நல்ல விருந்தை உபசரிக்கும் தன்மை உடைவன் என்பதை,

“இழை மருங்கு அறியா நுழை நூற் கலிங்கம்

எள் அறு சிறப்பின் வெள் அரைக் கொளீஇ

முடுவல் தந்த பைந் நிணத் தடியொடு

நெடு வெண்ணெல்லின் அரிசி முட்டாது

தலை நாள் அன்ன புகலொடு வழி சிறந்து

பல நாள் நிற்பினும் பெறுகுவிர் நில்லாது” (கூத்தராற்றுப்படை-561-566)

என்ற அடிகளின் வழி முதல் நாள் அளித்த விருந்து, விருந்தினரை போற்றிய முறையை பல நாட்கள் தங்கியிருந்தாலும் விருப்பம் குறையாமல் செய்யப்பட்ட முறையை அறியமுடிகின்றது.

**முடிவுரை:**

உயர்ந்த பண்புகளைக் கொண்ட உயர்ந்தோரை சங்கப் புலவர்கள் பாராட்டிப் பாடும் இயல்பு உடையவர்கள் என்பதை ஆற்றுப்படை நூல்கள் மூலம் அறியமுடிகின்றது.

பொருநர்,பாணர்,கூத்தர் போன்ற கலைஞர்கள் தமக்குள் பகைமை பாராட்டாமல் அன்பு பாராட்டி வாழ்வில் வளம்பெற ஒருவருக்கொருவர் வழிகாட்டியதாக அமையும் உயர்ந்த பண்பாட்டை ஆற்றுப்படை இலக்கியம் காட்டுகின்றது.

கரிகால் பெருவளத்தான் அன்புடன் அருகில் இருந்து கனிவான பார்வையுடன் நல்ல பல உணவுகளைத் தந்து உபசரித்து பண்பாடு மாறாமல் அவர்களை வழியனுப்பிய தன்மையை பொருநராற்றுப்படையின் வழி அறியமுடிகின்றது.

நல்லியக்கோடனின் ஆட்சியில் அவனது குடிகளும் சிறப்புடன் விருந்தோம்பலைப் பின்பற்றியுள்ளதை காணமுடிகிறது.

பெரும்பாணாற்றுப்படையின் மூலம் தொண்டைமான் இளந்திரையன் தாயைப் போல மரபு மாறாமல் விருந்து அளித்ததும், பரிசுப் பொருட்கள் தந்ததையும் உணரமுடிகின்றது.

நல்லியல்பு கொண்ட நன்னன் எத்தனை நாட்கள் தங்கியிருந்தாலும் முதல் நாள் அளித்த விருந்து போல விருந்தளித்தது போற்றுதலுக்குரியது.

பண்டைத் தமிழர்களின் வாழ்வில் உணவிற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் அதனைப் பகிர்ந்துண்ணும் பண்பு நிலை, வருவோர்க்கு இல்லையென்று கூறாமல் வழங்கும் மாண்பு போன்றவற்றை ஆற்றுப்படை நூல்களின் வழி மிக தெளிவாக அறியமுடிகின்றது.

சங்க காலத் தமிழனின் பழக்கத்தில் இருந்த பல செயல்பாடுகள், செயல்முறைகள் அறிவியல் வளர்ச்சி கண்ட நிலையிலும் சில செயல்பாடுகள் தற்பொழுதும் நடைமுறையில் இருக்கிறது. மேலும் பல நிலைகளில் உயர வேண்டும் என்பதை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

**துணைநூற்பட்டியல்**

முனைவர் அ. கந்தசாமி – பழந்தமிழரின் பழக்கவழக்கங்கள்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை
மு.ப – 2013

புலவர் அ. மாணிக்கம்(உ.ஆ) - பத்துப்பாட்டு
வர்த்தமானன் பதிப்பக வெளியீடு